20 வது அரசியலமைப்பு திருத்தத்தினைப் பற்றிச் சிந்திப்போம்

இலங்கையின் அரசியலமைப்புக்கான 20 வது திருத்தம் அரசியலமைப்பில் பல மாற்றங்களை ஏற்படுத்தும். அரசியலமைப்பு சட்டத்தரணிகளின் கவனத்திற்கும் அரசியல்வாதிகளின் கவனத்திற்கும் மாத்திரமே உரியது எனப் பலர் நினைக்கின்றனர் - இது உண்மையல்ல.

அரசியலமைப்பு உங்களின் உரிமைகளையும் உங்களின் பாதுகாப்பினையும் உங்களின் வாழ்வாதாரத்தினையும் உங்களின் வாழ்வினையும் பாதிக்கின்றது.

நீங்கள்தான் உங்களின் பாராளுமன்ற உறுப்பினரைத் தேர்வுசெய்தீர்கள் என்பதை உங்களின் பாராளுமன்ற உறுப்பினர் மறக்க அனுமதிக்காதீர்கள்.

உங்களின் பிரதிநிதி உங்களின் வாக்கினைப் பெற்றுக்கொண்டு அதனை உங்களின் நலனிற்கு எதிராக வாக்களிக்கப் பயன்படுத்த முடியாது

20 வது திருத்தம் நிறைவேற்றப்பட்டால் இலங்கை எவ்வாறு ஆளப்படும் என்பதைச் சற்று நோக்குவோம்:

1. ஜனாதிபதியின் கரங்களிலேயே முழு அதிகாரமும் இருக்கும்

- **20 வது திருத்தத்தின்** கீழ் சகல வகையான சட்டச் செயன்முறைகளில் இருந்தும் ஜனாதிபதி காப்புப் பெறுகின்றார்.

  பிரஜைகள் தங்களின் உரிமைகளைப் பாதுகாக்க ஜனாதிபதிக்கு எதிராக அடிப்படை உரிமைகள் மனுக்களைத் தாக்கல் செய்ய முடியாது - ஜனாதிபதி சட்டத்திற்கு அப்பாற்பட்டவர்.

  அண்மையில் பிரேசில் நாட்டினதும் பெரு நாட்டினதும் ஜனாதிபதிகள் மீதும் மலேசியப் பிரதமர் மீதும் ஊழல் மற்றும் மனித உரிமைகள் துஷ்பிரயோகக்

குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டன. இது தங்களின் அதிகாரங்களைத் துஷ்பிரயோகம் செய்து சட்டத்தினை மீறுகின்ற எதிர்கால ஜனாதிபதிகளுக்கு ஓர் எச்சரிக்கையாகவே கட்டாயம் இருக்கவேண்டும். ஆனால் இவ்வாறு இலங்கையில் நடக்க முடியாது.

எச்செயற்பாட்டிற்காகவும் ஜனாதிபதி வகைப்பொறுப்புக் கூறத்தேவையில்லை - குற்றவியல் செயற்பாடுகளாக இருந்தபோதிலும் கூட

- **20 வது திருத்தத்தின்** கீழ் அரசியலமைப்பினைப் பற்றிப் பிடிக்கவேண்டிய கடமை ஜனாதிபதிக்கு இனிமேல் இருக்காது அல்லது நல்லிணக்கத்தினை மேம்படுத்துவதற்கான கடமை இனிமேல் அவருக்கு இருக்காது

  மக்களை ஒன்றிணைத்து அனைத்து இலங்கையர்களையும் ஐக்கியப்படுத்துவது எமது ஜனாதிபதியின் அடிப்படைக் கடமையாக இருக்கக்கூடாதா?

- **20 வது திருத்தத்தின்** கீழ் அமைச்சரவையில் ஆதிக்கம் செலுத்துவதும் ஜனாதிபதிதான்

  அமைச்சர்களின் எண்ணிக்கையை ஜனாதிபதியே தீர்மானிக்கின்றார். அவரே அமைச்சுக்களை ஒதுக்குகின்றார். மேலும் அவரே அனைத்து அமைச்சர்களையும் தெரிவுசெய்கின்றார். இதில் அமைச்சரவை அமைச்சர்கள், பிரதியமைச்சர்கள், ராஜாங்க அமைச்சர்கள் மற்றும் பதில் அமைச்சர்கள் உள்ளடங்குவதுடன் இவர்களைத் தனது விருப்பின் பேரில் ஜனாதிபதியினால் அகற்றவும் முடியும்.

  ஜனாதிபதி தான் விரும்பும் எந்த அமைச்சினையும் மேலும் எத்தனை அமைச்சுக்களையும் எடுக்க முடியும்.

  ஜனாதிபதி எனும் ஒரு தனி மனிதரால் சுற்றாடல், காணி, தொழில், வர்த்தகம் போன்ற அனைத்துப் பிரச்சினைகளையும் தீர்க்க முடியுமா?

  ஒரு மத்திய அதிகாரத்தினால் தமது நலன்கள் பாதுகாக்கப்படுகின்றன என அனைத்துப் பிரசைகளும் நம்பிக்கை கொள்ள முடியுமா?

  20 வது திருத்தம் என்பதே 'ஜனாதிபதி ஆகிய நான்' என்பதைப் பற்றியே சுற்றிச் சுழலுகின்றது - அவ்வாறாயின், 'நாங்கள், மக்களாகிய நாங்கள்', என்பதற்கு என்ன நடக்கின்றது?

2. மிகப் பெரிய அமைச்சரவை மீண்டும் வருகின்றது

உலகிலேயே மிகப் பெரிய அமைச்சரவையினைக் கொண்டிருந்த சாதனையினை இலங்கை படைத்துள்ளது - நூறு கோடி மக்களைக் கொண்ட இந்தியாவின் அமைச்சரவையினை விட இது பெரியது

2005 இல் இலங்கையில் இருந்த அமைச்சர்களின் எண்ணிக்கை 52 ஆகும். 2007 ஆம் ஆண்டில் 33 அமைச்சரவை அற்ற அமைச்சர்களும் 19 பிரதியமைச்சர்களும் நியமிக்கப்பட்டனர்.

225 உறுப்பினர்களைக் கொண்ட பாராளுமன்றத்தில் 104 பேர் ஏதோ ஒரு அமைச்சுச் சார்ந்த பதவியினைக் கொண்டுள்ளனர்.

ஜனாதிபதி விரும்பினால் பென்னம்பெரிய அமைச்சரவையினைக் கொண்டிருந்த இலங்கையின் கடந்த காலச் சாதனையினை 20 வது திருத்தத்தினால் முறியடிக்க முடியும்

- **பென்னம்பெரிய அமைச்சரவைக்கான தேவை என்ன?**

  இதன் நோக்கம் பல பாராளுமன்ற உறுப்பினர்களுக்குச் சலுகைகளையும் சிறப்புரிமைகளையும் வழங்கி அவர்களின் விசுவாசத்தினைப் பெற்றுக்கொள்வதாகும்.

  மக்களாகிய நாங்களே இதற்கான விலையினைக் கட்டாயம் செலுத்தவேண்டியுள்ளது - பாடசாலைகளுக்கும் வைத்தியசாலைகளுக்கும் சாதாரண மக்களின் வாழ்வினைச் சிறந்ததாக மாற்றுவதற்கு அவசியமானவற்றிற்கும் குறைந்த பணமே மிஞ்சும்.

  பிரஜைகளுக்குத் தேவைப்படுவது இதுதானா?

3. பிரதமரையும் பாராளுமன்றத்தினையும் தாண்டி ஜனாதிபதி ஆதிக்கம் செலுத்துகின்றார்

மக்களாலேயே ஜனாதிபதி தேர்வுசெய்யப்படுகின்றார்

பிரதமர் பராளுமன்ற உறுப்பினராவார். பிரதமரும் ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்களும் மக்களாலேயே தேர்வுசெய்யப்படுகின்றனர்.

பாராளுமன்றத்தினைத் தேர்வுசெய்வதும் மக்கள் தங்களின் இறைமையினை வெளிப்படுத்தும் ஒரு வெளிப்பாடாகும்.

இது எவ்வாறு இருந்தபோதிலும்,

- **20 வது திருத்தத்தின் கீழ் ஜனாதிபதியினால் பாராளுமன்றத்தினைக் கலைக்க முடியும், பிரதமரை அகற்றி,** பாராளுமன்றத்தினைக் கலைத்து புதுத் தேர்தலுக்கு அழைப்பு விடுக்க முடியும்.

  பாராளுமன்றத்தின் பெரும்பான்மை ஆதரவினைப் பிரதமர் கொண்டிருந்தபோதிலும், பொதுத் தேர்தல் நடந்து ஒரு வருடத்தின் பின்னர் ஜனாதிபதியினால் இதனை நிறைவேற்ற முடியும்

- **20 வது திருத்தத்தின் கீழ் அமைச்சரவை தொடர்பான விடயங்கள் பற்றி தீர்மானிக்கும் சக்தி பிரதமருக்கு இனிமேல் இருக்காது**

  அவசியம் என நினைத்தால் மட்டுமே ஜனாதிபதி பிரதமரை ஆலோசிப்பார்.

  ஆனால் பிரதமரின் ஆலோசனையினை ஜனாதிபதி அவசியம் பின்பற்றவேண்டிய கட்டாயமில்லை

- **20 வது திருத்தத்தின் கீழ் பாராளுமன்றத்தினைக் கலைக்காமல் ஜனாதிபதியினால் பிரதமரை அகற்ற முடியும்.**

  ஜனாதிபதியின் அபிப்பிராயப்படி பாராளுமன்றத்தின் நம்பிக்கையினைக் கொண்டுள்ளவர் என ஜனாதிபதி நினைக்கும் ஒருவரை புதிய பிரதமராக ஜனாதிபதியினால் நியமிக்க முடியும்.

  பிரதமரின் அதிகாரத்தினையும் செயற்பாடுகளையும் ஜனாதிபதி தனக்கென ஒதுக்கிக்கொள்ள முடியும்.

- **20 வது திருத்தத்தின் கீழ் ஜனாதிபதியினால் பிரதமரைக் கீழறுக்க முடியும்**

  பிரதமர் வரையறுக்கப்பட்ட அதிகாரங்களையே கொண்டிருப்பார் - எனவே இந்தப் பதவியின் நோக்கம்தான் என்ன?

பாராளுமன்றத்தினைக் கலைக்குமாறு ஜனாதிபதியினை வேண்டுவதற்காக பாராளுமன்றத்தில் சிறிய பெரும்பான்மையினரைக் கொண்டவர்களினால் தீர்மானம் நிறைவேற்றப்பட முடியும்

பாராளுமன்றத்தினைக் கையாளுவதற்கான வழிகளே இவை - மக்களால் தேர்வுசெய்யப்பட்ட நிறுவனம்.

மக்களாகிய நாம் பாராளுமன்றத்தினை அகற்றுவதற்குத் தயாராக இருந்தால் கட்டாயம் கேள்வி கேட்கவேண்டும்:

1935 இல் இலங்கையர்களாகிய நாம் வாக்களிக்க ஆரம்பித்து 1948 இல் இருந்து பாராளுமன்றம் ஜனநாயகமாக இயங்கி வருகின்றது.

நாம் பாராளுமன்றத் தேர்தல்களை மிகத் தீவிரமாகக் கருத்தில் கொள்கின்றோம்

2020 இல், கொவிட் 19 கொள்ளை நோய் நிலவியபோதிலும், தேர்தல் தொகுதிகளில் 70 சதவிகிதமானவை வாக்களித்தன

ஜனாதிபதி பாராளுமன்றத்தினைக் கலைக்க நினைக்கும் ஒவ்வொரு தடவையும் அடிக்கடி பாராளுமன்றத் தேர்தல்களை நடத்துவது இலங்கைக்கு இயலுமான காரியமா?

அடிக்கடி நடத்தப்படும் தேர்தல்களினால் உருவாக்கப்படும் செலவுகளையும் ஸ்திரமின்மையினையும் இலங்கையினால் கையாள முடியுமா?

பாராளுமன்றத்தினை இல்லாமலாக்கப் பிரஜைகள் தயாராகவுள்ளனரா?

4. சட்டமியற்றும் செயன்முறையில் இருந்து பிரஜைகள் அகற்றப்பட்டுள்ளனர்

இயங்கிவரும் ஒரு ஜனநாயகத்தில் சட்டவாக்கத்திற்கு உள்ளீடுகளை வழங்கும் வாய்ப்பினைப் பொதுமக்கள் கொண்டிருக்கவேண்டும்.

அவர்கள் சட்டமூலங்களை ஆராயவேண்டும், அவற்றினைப் பற்றிக் கலந்துரையாடவேண்டும், ஊடகத்தின் மூலமும் தங்களின் பிரதிநிதிகளின் மூலமும் பாராளுமன்றத்திற்குப் பரிந்துரைகளை வழங்கவேண்டும்.

- **20 வது திருத்தத்தின் கீழ், சட்டமூலத்தினை ஆராய்ந்து அதற்கு எதிராக வழக்குத் தொடுப்பதற்கு பொதுமக்களுக்கு 7 நாட்கள் மாத்திரமே உண்டு.**

  அதனை ஜனாதிபதி 'தேசிய நலனின் காரணமாக அவசரமான சட்டமூலமாக' வகைப்படுத்தி நேரடியாக உச்ச நீதிமன்றத்திற்கு ஆற்றுப்படுத்தினால், அச்சட்டமூலத்தின் அரசியலமைப்பு ரீதியான இயைபுறல் தொடர்பாக உச்ச நீதிமன்றம் தீர்மானிப்பதற்கு 24 மணித்தியாலங்களை அல்லது 72 மணித்தியாலங்களையே கொண்டுள்ளது.

  சட்டமூலம் 24 மணித்தியாலங்களிலா அல்லது 72 மணித்தியாலங்களிலா ஆராயப்படவேண்டும் அல்லது ஆராயப்படலாம் என்பதைத் தீர்மானிப்பது ஜனாதிபதியே அன்றி நீதிமன்றம் அல்ல.

  சட்டமூலத்தினை மீளாய்வு செய்யும் செயன்முறையில் இருந்தும் இந்தக் குறுகிய கால அளவு பொதுமக்களை அகற்றிவிடுகின்றது.

மிக மோசமான குறைபாடுகளுடன் வரையப்பட்ட சட்டங்களை இலங்கை பல சந்தர்ப்பங்களில் எதிர்கொண்டுள்ளது

5. சுயாதீனமான அரசியலமைப்பு ஆணைக்குழுக்களின் மீதான தாக்கம்

மிக முக்கியமான பதவிகளுக்கு அதிகாரிகளைத் தெரிவுசெய்யும் அரசியல்மயமாக்கப்பட்ட செயன்முறை அரச அதிகாரிகள் நடுநிலையானவர்களாகவும் பக்கச்சார்பற்றவர்களாகவும் இருப்பார்கள் என்கின்ற நம்பிக்கையினை மக்கள் இழப்பதற்குக் காரணமாகின்றது.

19வது திருத்தம் அரசியலமைப்புச் சபையினை அறிமுகப்படுத்தியது. இது மிக முக்கியமான நியமனங்கள் தொடர்பாக ஜனாதிபதிக்கு விதப்புரைகளை வழங்குவதற்காக அரசியல் ரீதியாக உள்ளடக்கும் தன்மைமிக்கதாக இருக்கின்றது.

இந்த மிக முக்கியமான நியமனங்களுள் 9 சுயாதீனமான அரசியலமைப்புச் சபைகளின் நியமனங்களும் உச்ச நீதிமன்ற நீதிபதிகள் மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகளின் நியமனங்களும் சட்டமா அதிபர் நியமனமும் கணக்காய்வாளர் தலைமையதிபதியின் நியமனமும் பொலிஸ் மாஅதிபரின் நியமனமும் ஒம்புட்ஸ்மனின் நியமனமும் பாராளுமன்றச் செயலாளர் நாயகத்தின் நியமனமும் உள்ளடங்குகின்றன. இந்த அதிகாரிகளை அகற்றுவதற்கும் அரசியலமைப்புச் சபையின் அங்கீகாரம் தேவைப்படுகின்றது.

ஜனநாயகத்தினை வலுப்படுத்துவதற்காக, தேவையற்ற அரசியல் தலையீடுகளும் செல்வாக்குகளும் ஆதிக்கம் செலுத்தவில்லை என்பதை உறுதிப்படுத்துவதற்காகவே இவை உருவாக்கப்பட்டுள்ளன.

- **20 வது திருத்தத்தின் கீழ் கீர்த்திமிக்க 3 நபர்களைக் கொண்ட அரசியலமைப்புச் சபை பாராளுமன்றச் சபை மூலம் பதிலீடு செய்யப்படுகின்றது**

  பாராளுமன்றச் சபை என்பது ஓர் அரசியல் அமைப்பாகும். இது கட்சி ரீதியாகவே செயலாற்றும்.

  நியமனங்கள் தொடர்பான கருத்துரைகளை இச்சபை வழங்கும். ஆனால் அவற்றினைப் பின்பற்றவேண்டும் என்ற கடப்பாடு இல்லை.

  பாராளுமன்றச் சபைக்கு அதிகாரம் இல்லை. மேலும் அது சுயாதீனமானதாக இருக்க முடியாதது என்பதுடன் சுயாதீனமான மற்றும் பக்கச்சார்பற்ற தீர்மானங்களையும் மேற்கொள்ள முடியாதாகும் - இது என்ன நோக்கத்தினைத்தான் நிறைவேற்றும்?

- **20 வது திருத்தத்தின் கீழ் தேர்தல் ஆணைக்குழுவின் சுயாதீனமும் அதிகாரங்களும் பாதிக்கப்படுகின்றன**

  தேர்தல் ஆணைக்குழுவினையும் ஆணைக்குழுவின் தலைவரையும் தற்காலிக உறுப்பினர்களையும் ஜனாதிபதி மட்டுமே நியமிப்பார்.

  தேர்தலின்போது நடந்துகொள்ளும் விதம் பற்றி அரச சேவைக்கு தேர்தல் ஆணைக்குழு வழிகாட்டல்களை வழங்காதிருக்கலாம். அதாவது அண்மைய தேர்தல்களின்போது ஊடகத் துறைக்குச் செய்ததைப் போன்று.

தேர்தல் ஆணைக்குழுவின் வழிகாட்டல்களுக்கு அல்லது பணிப்புரைகளுக்கு இயைபுறுவதற்குப் பொதுவாகத் தவறுகின்றமையானது இனிமேல் குற்றமாகக் கருதப்படமாட்டாது.

அரச சேவை தொடர்பாக வழிகாட்டல்களை வழங்காமலும் இயைபுறாமைக்குத் தண்டனை இல்லாமலும் நடத்தப்படும் தேர்தல்கள் சுதந்திரமானவை, நீதியானவை மற்றும் வெளிப்படைத்தன்மை மிக்கவை என்பதை தேர்தல் ஆணைக்குழுவினால் உறுதிப்படுத்த முடியுமா?

சுதந்திரமான மற்றும் நீதியான தேர்தல்களை நடத்துவதற்கான தேர்தல் ஆணைக்குழுவின் அதிகாரத்தில் இது எவ்வாறு ஆதிக்கம் செலுத்தலாம் என்பது பற்றி நீங்கள் கரிசணை கொண்டுள்ளீர்களா?

- **20 வது திருத்தத்தின் கீழ், தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் அதிகாரங்களும் சுயாதீனமும் பாதிக்கப்படுகின்றன**

  தேசிய பொலிஸ் ஆணைக்குழுவிற்கு உறுப்பினர்களை நியமிப்பதற்கான மற்றும் அகற்றுவதற்கான அதிகாரத்தினை ஜனாதிபதி மட்டுமே கொண்டிருப்பார்

  பொலிஸ் மாஅதிபர் ஆணைக்குழுவின் கூட்டங்களில் இனிமேல் கலந்துகொள்ள மாட்டார்.

  ஆணைக்குழுவின் தீர்மானங்களுக்கு எதிராக மேன்முறையீடு இல்லை.

  பொலிஸ் அதிகாரிகளை நியமிப்பதற்கான, அவர்களுக்குப் பதவியுயர்வு வழங்குவதற்கான, இடமாற்றம் செய்வதற்கான, பதவியில் இருந்து அகற்றுவதற்கான அல்லது அவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கான அதிகாரத்தினைத் தேசிய பொலிஸ் ஆணைக்குழு கொண்டிராது.

  பொலிஸ் அதிகாரிகளுக்கு எதிராகப் பொதுமக்களினால் முன்வைக்கப்பட்ட முறைப்பாடுகளை மட்டும் பாராளுமன்றத்தினால் வரையப்பட்ட சட்டங்களுக்கு அமைவாக ஆணைக்குழு விசாரிக்கும்.

- **20 வது திருத்தத்தின் கீழ் நீதிச் சேவை ஆணைக்குழுவின் சுயாதீனமும் அதிகாரங்களும் பாதிக்கப்படுகின்றன**

  நீதிச் சேவை ஆணைக்குழுவின் வகிபாத்திரம் மாவட்ட நீதிபதிகள் மற்றும் நீதவான்கள் போன்றோரை நியமித்தலும் இடமாற்றம் செய்தலும் பதவியில் இருந்து அகற்றலும் அவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதும் விசேட அரசாங்க அதிகாரிகளை நியமிப்பதும் ஆகும்.

  எனவே இது நீதிமுறைத் தீர்மானங்களில் பக்கச்சார்பின்மையினைப் பேணி அவற்றினை ஜனாதிபதியின் கட்டுப்பாட்டில் இருந்து அகற்றுகின்றது.

நீதிச் சேவை ஆணைக்குழுவிற்கு ஜனாதிபதி யாராகிலும் இரண்டு நீதிபதிகளை நியமிக்கலாம். அவர்கள் சிரேஷ்ட நீதிபதிகளாகவோ அல்லது முதற் சந்தர்ப்பத்தில் நீதிமன்றம் ஒன்றில் நீதிபதியாகச் சேவையாற்றிய (பிரதான நீதிமன்றம் அல்லது நீதவான் நீதிமன்றம்) எந்த அனுபவத்தினையும் கொண்டவர்களாகவோ இருக்கவேண்டும் என்கின்ற அவசியம் இல்லை.

பாராளுமன்றச் சபைக்கு எவ்வித ஆற்றுப்படுத்தலையும் மேற்கொள்ளாமல் இவ்வாறான உறுப்பினர்களை ஜனாதிபதியினால் நியமிக்க முடியும் அல்லது அகற்ற முடியும்.

நீதிச் சேவை ஆணைக்குழுவிற்கு நியமனங்களை மேற்கொள்வதற்கு எவ்விதமான தெரிவடிப்படையும் இல்லை - (உதா: வயது, தகைமைகள், அனுபவம், மூப்புரிமை)

இந்த நியமனங்கள் மற்றும் அகற்றுகைகள் பற்றி எவ்விதமான கருத்துரைகளையும் வழங்குவதற்குக் கூடப் பாராளுமன்றச் சபைக்கு வாய்ப்பு இல்லை.

நீதிச் சேவை ஆணைக்குழுவின் மீது ஜனாதிபதி கட்டற்ற அதிகாரங்களைக் கொண்டிருப்பது நீதிமுறைமை மீது ஜனாதிபதிக்குக் கட்டற்ற அதிகாரங்களை வழங்குகின்றது

பொதுமக்கள் சட்டத்தின் ஆட்சியினால் பாதுகாக்கப்படுவார்களா?

- **20 வது திருத்தத்தின் கீழ் இலஞ்சம் மற்றும் ஊழல் பற்றிய சார்த்துதல்களை விசாரிப்பதற்கான ஆணைக்குழுவின் சுயாதீனமும் அதிகாரங்களும் பாதிக்கப்படுகின்றன**

இலஞ்சம் மற்றும் ஊழல் பற்றிய சார்த்துதல்களை விசாரிப்பதற்கான ஆணைக்குழுவின் அரசிலயமைப்பு ரீதியான அங்கீகாரத்தினை 20 வது திருத்தம் அகற்றுகின்றது. இதனால் ஆணைக்குழுவினையே ஒட்டுமொத்தமாக இல்லாமலாக்குவதற்கு எதிர்காலப் பாராளுமன்றத்திற்கு அனுமதி வழங்கப்படுகின்றது.

180 நாடுகளில் குறைந்த ஊழல்களைக் கொண்ட நாடுகளின் பட்டியலில் இலங்கைக்கு 93வது இடம் வழங்கப்பட்டுள்ளது

டிரான்ஸ்பேரன்சி இண்டர்நேசனல் அறிக்கையிட்ட 2019 ஆம் ஆண்டிற்கான ஊழல் பற்றிய புலணுணர்வுகள் சுட்டிக்கு அமைவாக, 180 நாடுகளில் இலங்கை 93 வது இடத்தில் இருக்கின்றது.

நாட்டின் பொருளாதாரத்தினையும் சேவைகளின் தரத்தினையும் அரசியல் நிறுவனங்களையும் சமூகக் கட்டமைப்புக்களையும் சீரழிக்கும் ஊழலையும் இலஞ்சத்தினையும் பிரசைகளாகிய நாம் எதிர்க்க விரும்பவில்லையா?

இவை இடம்பெறவில்லை என்பதை உறுதிப்படுத்துவதற்கும் அவ்வாறு இடம்பெற்றால் அவற்றினைக் கண்டுபிடிப்பதற்கும் ஓர் அமைப்பு எமக்கு வேண்டாமா?

- **20 வது திருத்தத்தின் கீழ் தேசிய பெறுகை ஆணைக்குழுவும் கணக்காய்வுச் சேவை ஆணைக்குழுவும் கலைக்கப்படுகின்றன**

  மேலும் மேலும் ஊழலுக்கு வழிவிடுகின்ற ஒழுங்கமைக்கப்படாததும் வெளிப்படைத்தன்மையற்றதுமான பெறுகைச் செயன்முறையினை இலங்கை கொண்டிருக்கும் (கேள்வி கோரல்).

  வீண்விரயம், மோசடி மற்றும் பணம் தூய்தாக்கல் ஆகியவை கண்டுபிடிக்கப்பட்டுப் பகிரங்கப்படுத்தப்பட மாட்டாது என்பதையும் அதனால் அவை தண்டிக்கப்படக்கூடியவையாக இருக்காது என்பதையும் சுயாதீன கணக்காய்வு ஆணைக்குழு இல்லாமை உறுதிப்படுத்தும்.

இலங்கை பணம் தூய்தாக்கலுக்கான பாதுகாப்பான இடமாக இருக்கின்ற காரணத்தினால் கண்காணிக்கப்பட்டு வரும் நாடுகளின் பட்டியலில் இலங்கை இருந்து வருகின்றது. இது மீண்டும் பிரச்சினையாக மாறினால் இலங்கை சர்வதேசக் கண்காணிப்பின் கீழ் வரும் என்பதுடன் இதனால் வெளிநாட்டு முதலீட்டுக்கு விரும்பப்படும் நாடாக இருக்காமல் ஐயத்துக்குரிய பொருளாதாரமாக இருக்கும்.

- **20 வது திருத்தத்தின் கீழ் அரச சேவை ஆணைக்குழுவின் சுயாதீனமும் அதிகாரங்களும் பாதிக்கப்படுகின்றன**

  அரசாங்க உத்தியோகத்தர்களை நியமிப்பதற்கும் அவர்களுக்குப் பதவியுயர்வு வழங்குவதற்கும் அவர்களை இடமாற்றம் செய்வதற்கும் அவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கும் அவர்களைப் பதவியில் இருந்து அகற்றுவதற்கும் அரச சேவை தொடர்பாக விதிகளையும் ஒழுங்குவிதிகளையும் செயல்விதிகளையும் இயற்றுவதற்குமான அதிகாரங்களை அரச சேவை ஆணைக்குழு கொண்டுள்ளது (PSC).

  பாராளுமன்றச் சபையின் அங்கீகாரம் இன்றி அரச சேவை ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் ஜனாதிபதியினால் நியமிக்கப்படுவர் மேலும் அகற்றப்படுவர்.

  உறுப்பினர்களல்லாத 3 பேரடங்கிய குழுவொன்றினை ஆணைக்குழு நியமித்து, அரசாங்க உத்தியோகத்தர்களின் சில குறிப்பிட்ட வகுப்பினரை நியமிப்பதற்கான, அவர்களுக்குப் பதவியுயர்வு வழங்குவதற்கான, அவர்களை இடமாற்றம் செய்வதற்கான, அவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கான மற்றும் அவர்களைப் பதவியில் இருந்து அகற்றுவதற்கான அதிகாரத்தினை அக்குழுவிடம் ஒப்படைக்கலாம்.

  இந்த ஆணைக்குழுவின் ஆணையினுள் வருகின்ற உத்தியோகத்தர்களின் வகையினை அமைச்சர்கள் குறித்துரைப்பர்.

  ஆணைக்குழு நியமிக்கும் குழுவின் அதிகாரங்கள் பற்றியோ அல்லது அதன் செயற்பாடுகள் பற்றியோ எந்த நீதிமன்றமோ அல்லது நியாயாதிக்க மன்றோ விசாரிக்க முடியாது அல்லது கேள்வி கேட்க முடியாது.

அரச சேவை ஆணைக்குழு என்பது அதன் குழுவானது அதிக அதிகாரங்களைக் கொண்டிருக்கின்ற ஒரு புறக் கட்டமைப்பாகவே இருக்கும். இது அரச சேவையினை அரசியல்மயமாக்குவதற்கான சாத்தியத்தினைக் கொண்டுள்ளதுடன் அரசாங்க அதிகாரிகளின் சேவை நிபந்தனைகளைக் கீழறுப்பதற்கான சாத்தியத்தினையும் கொண்டுள்ளது.

அரச உத்தியோகத்தர்களை அரசே நியமனம் செய்கின்றது. அரசே நாட்டின் மிகப்பெரிய தொழில் வழங்குனராகும்.

எவ்வாறாயினும், தொடர்ச்சியாக ஆட்சிக்கு வரும் அரசாங்கங்கள் அரசாங்க உத்தியோகத்தர்களில் தலையீடு செய்து அவர்கள் பணியாற்றும் வழிகளிலும் தலையீடு செய்து வருகின்றன.

அவர்கள் தங்களின் பதவிக் காலம் தொடர்பான பாதுகாப்பினையும் தொழில்வாய்ப்பிற்கான நியாயமான நிபந்தனைகளையும் கொண்டிருப்பார்களா?

- **20 வது திருத்தத்தின் கீழ், ஏனைய சுயாதீன ஆணைக்குழுக்களும் அபாயநேர்வில் உள்ளன.**

மனித உரிமைகள் ஆணைக்குழு உறுப்பினர்கள், நிதி ஆணைக்குழு உறுப்பினர்கள், எல்லை நிர்ணய ஆணைக்குழு உறுப்பினர்கள், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு உறுப்பினர்கள், அரசகரும மொழிகள் ஆணைக்குழு உறுப்பினர்கள், கணக்காய்வாளர் தலைமையதிபதி, இலஞ்சம் மற்றும் ஊழல் பற்றிய சார்த்துதல்களை விசாரிப்பதற்கான ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் ஆகியோர் இனிமேல் அரசாங்க உத்தியோகத்தர்கள் அல்ல.

மிக முக்கியமான ஆணைக்குழுக்கள் கைவிடப்படுகின்றன மேலும் ஏனைய ஆணைக்குழுக்கள் நடுநிலையாக்கப்படுகின்றன என்பதையிட்டு ஒரு பிரஜை என்கின்ற ரீதியில் நீங்கள் கரிசணை கொண்டுள்ளீர்களா?

2016 இற்கும் 2018 இற்கும் இடைப்பட்ட காலத்தில் 15963 நபர்கள் பல்வேறு சந்தர்ப்பங்களில் மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் பரிகாரத்திற்காக விண்ணப்பித்துள்ளனர்.

- **20 வது திருத்தத்தின் கீழ் ஜனாதிபதியின் அலுவலகமும் பிரதமரின் அலுவலகமும் கணக்காய்வாளர் தலைமையதிபதியின் கணக்காய்வுக்கு உட்படவேண்டிய தேவையற்றவையாகுகின்றன**

வீண்விரயங்கள், மோசடி மற்றும் ஊழல் ஆகியவை கேள்விச் சபைகளின் மூலமும் கணக்காய்வு ஆணைக்குழுக்களின் மூலமும் கட்டுப்படுத்தப்படுகின்றன.

வீண்விரயங்கள், மோசடி மற்றும் ஊழல் ஆகியவற்றுக்கான சாத்தியங்கள் ஒரு பிரசை என்கின்ற ரீதியில் உங்களின் உரிமைகளிலும் பாதுகாப்பிலும் தாக்கத்தினை ஏற்படுத்தலாம்.

நீங்கள் கரிசணை கொண்டுள்ளீர்களா?

- **20 வது திருத்தத்தின் கீழ் இரட்டைப் பிரஜாவுரிமை கொண்டவர்கள் பாராளுமன்ற உறுப்பினர்களாகவும் ஜனாதிபதியாகவும் கூட வர முடியும்**

நபர் ஒருவர் வேறு ஒரு நாட்டின் பிரஜையாக மாறுகையில் அவர் அந்த நாட்டிற்கு விசுவாசமானவர் எனச் சத்தியப்பிரமாணம் செய்யவேண்டும். சில நாடுகளில் அவர் அந்த நாட்டிற்காக ஆயுதங்களைக் கூடத் தாங்கவேண்டியிருக்கும். இலங்கையினையும் அவ்வாறான நபர் பிரஜாவுரிமை பெற்றுள்ள நாட்டினையும் பாதிக்கின்ற விடயங்கள் தொடர்பாக அந்த நபர் தீர்மானிக்கவேண்டியிருக்கையில், அவர் எந்த நாட்டிற்கு உயர் விசுவாசம் கொண்டிருப்பார்? நாம் எவ்வாறு அந்த நபரில் பூரண நம்பிக்கை கொண்டிருக்க முடியும்?

உங்கள் பாராளுமன்ற உறுப்பினரிடம் கேட்கவேண்டிய கேள்விகள்

நீங்கள் 20 வது திருத்தத்திற்கு ஆதரவாக வாக்களிக்க முன்னர் நாம் உங்களிடம் 09 கேள்விகளைக் கேட்கப்போகின்றோம்

பிரசைகள் எமது பாராளுமன்ற உறுப்பினர்களைத் தேர்வுசெய்வதற்கான காரணம் பாராளுமன்றத்தில் எமது பிரச்சினைகளையும் கோரிக்கைகளையும் பிரதிநிதித்துவம் செய்வதற்காகவாகும் - நீங்கள் எங்களின் பிரதிநிதிகளாக இருக்கவேண்டும் என்றே நாம் விரும்புகின்றோம்.

1. 20 வது திருத்தத்தின் கீழ் பாராளுமன்றம் ஓரங்கட்டப்படுகின்றது.

நீங்கள் இனிமேலும் உங்கள் வாக்காளர்களின் அபிலாஷைகளைப் பிரதிநிதித்துவம் செய்ய முடியாத வகையில் உங்களின் குரலை அகற்றுகின்ற ஒரு சட்டவாக்கத்திற்கு நீங்கள் ஆதரவு வழங்குவீர்களா?

2. 20 வது திருத்தத்தின் கீழ் சகல அதிகாரங்களும் ஜனாதிபதியிடமே குவிக்கப்படுகின்றன.

அனைத்துப் பொறுப்புக்களையும் அணைத்து அதிகாரங்களையும் ஒரு தனிநபரே எடுத்துக்கொள்ள அனுமதிப்பது பாதுகாப்பானதா? ஜனாதிபதி நோயில் வீழ்ந்தால் என்ன நடக்கும்? நாம் வாக்களித்திராத ஆனால் அனைத்து அதிகாரங்களையும் கொண்ட யாரோ ஒருவர் அவரை பதிலீடு செய்யலாம்.

3. கணக்காய்வு ஆணைக்குழுவும் பெறுகை ஆணைக்குழுவும் 20 வது திருத்தத்தினால் அகற்றப்படும்.

அரசாங்கம் பிரசைகளின் பணத்தினை எவ்வாறு செலவழிக்கின்றது என்பதற்கு அரசாங்கம் வகைப்பொறுப்புக் கொண்டிருக்கக்கூடாதா?

4. 20 வது திருத்தத்தின் கீழ் ஏனைய ஆணைக்குழுக்களும் அகற்றப்படலாம்.

காணிப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் பதவியுயர்வுகளுக்கும் உள்ளூர் உத்தியோகத்தர்களின் தொந்தரவு பற்றி முறைப்பாடு செய்வதற்கும் நாம் யாரிடம் செல்லலாம்? நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு அதிக காலமும் பணமும் செலவாகின்றது. வறியவர்களினால் நீதிமன்றம் செல்வதற்குச் செலவழிக்க முடியாது.

5. உங்களுக்கு வாக்களித்த பிரசைகளுக்குப் பொறுப்புக்கூறவேண்டியவர் என நீங்கள் உணர்கின்றீர்களா அல்லது ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் மட்டுமா?

6. 2015 ஆம் ஆண்டில், 19 வது திருத்தத்திற்கு ஆதரவாக வாக்களித்ததன் மூலம் ஜனாதிபதியின் அதிகாரங்களைக் குறைத்து பாராளுமன்றத்தினை மிகுந்த சுயாதீனமுடையதாக ஆக்குவதற்கு நீங்கள் இணங்கினீர்கள். இவை அனைத்தையும் தலைகீழாக மாற்றும் 20 வது திருத்தத்திற்கு நீங்கள் இணங்கினால், உங்களின் திறனாய்வு முடிவினையும் நீங்கள் ஒத்திசைவானவர் என்பதையும் நாம் நம்ப முடியுமா?

7. அரச சேவை எதையும் மதிப்பது போல் தென்படவில்லை. இதுதானா உங்களுக்குத் தேவை?

8. திருத்தம் கொண்டுவரப்படும் அவசரத்தினையும் இரகசியத்தினையும் நாம் விரும்பவில்லை. அதை யார் வரைந்தனர் என்பதை எமக்கு யாரும் கூறமாட்டார்கள். பொருளாதாரத்தினைச் சரியான தடத்தில் இட்டு, தொழில்களை உருவாக்கி, வெளிநாடுகளில் நட்டாற்றில் நிற்கும் எமது தொழிலாளர்களின் நலன்களைக் கவனித்துக் கருமமாற்றுவதில் ஈடுபடவேண்டிய நீங்கள் இந்தத் திருத்தத்தில் உங்களின் நேரத்தினை வீணாக்குகின்றீர்களா?

9. இரட்டைப் பிரசாவுரிமையுடைவர்கள் பாராளுமன்றத்தில் அமர அனுமதிக்கப்படுவர்

நபர் ஒருவர் வேறு ஒரு நாட்டின் பிரசையாக மாறுகையில் அவர் அந்த நாட்டிற்கு விசுவாசமானவர் எனச் சத்தியப்பிரமாணம் செய்யவேண்டும். சில நாடுகளில் அவர் அந்த நாட்டிற்காக ஆயுதங்களைக் கூடத் தாங்கவேண்டியிருக்கும். இலங்கையினையும் அவ்வாறான நபர் பிரசாவுரிமை பெற்றுள்ள நாட்டினையும் பாதிக்கின்ற விடயங்கள் தொடர்பாக அந்த நபர் தீர்மானிக்கவேண்டியிருக்கையில், அவர் எந்த நாட்டிற்கு உயர் விசுவாசம் கொண்டிருப்பார்?

சட்டம் மற்றும் சமூக நம்பிக்கைப்பொறுப்பின் கூட்டணி
இல. 03, கின்சி டெரஸ், கொழும்பு 08, இலங்கை
தொலைபேசி + 94 (0) 112684845
தொலைநகல் + 94 (0) 112686843
admin@lstlanka.org
www.lstlanka.org

LAW & SOCIETY TRUST